


சாதியை எதிர்த்துப்
போராடுங்கள் ; அது
ஜனநாயகத்திற்கு எதிரி
என்பதால் !
மூடநம்பிக்கையை
எதிர்த்துப் போராடுங்கள்;
அது அறிவியலுக்கு எதிரி
என்பதால் !
ஆதிக்கத்தை எதிர்த்துப்
போராடுங்கள்; அது
சுதந்திரம் சமத்துவம்
சகோதரத்துவத்திற்கு
எதிரி என்பதால் !

-பேரறிஞர் அண்ணா

## பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி!

### தமிழ் வளர்ச்சித் துறை நடத்துகிறது!

சென்னை, அக்.18 -

தமிழ் வளர்ச்சித் துறையின் அறிவிப்பு வருமாறு:-

தமிழ் வளர்ச்சித் துறையின் 2021-2022ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்பிற்கிணங்க “நாட்டிற்காகப் பாடுபட்ட தலைவரான அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்த நாள் பேச்சுப் போட்டி 22.10.2024 அன்று பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு வடசென்னை அளவில் வியாசர்பாடி டாக்டர் அம்பேத்கர் கலைக் கல்லூரியிலும், மத்திய சென்னை அளவில் சேப்பாக்கம் மாநிலக் கல்லூரியிலும், தென்சென்னை அளவில் இராணி மேரி கல்லூரியிலும் என 3 நிலைகளில் முற்பகல் 09.00 மணி அளவில் சென்னை மாவட்டத்தில் நடைபெற உள்ளது.

இப்பேச்சுப் போட்டிகளில் வெற்றிபெறும் பள்ளி மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5000/ இரண்டாம் பரிசு ரூ.3000/, மூன்றாம் பரிசு ரூ.2000/ மேலும் அரசுப் பள்ளிகளில் பயிலும் இரு மாணவர்களுக்கு சிறப்புப் பரிசாக தலா ரூ.2000/ மற்றும் சான்றிதழும் வழங்கிச் சிறப்பிக்கப்பெறுவர்.

கல்லூரி மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.5000/ இரண்டாம் பரிசு ரூ.3000/, மூன்றாம் பரிசு ரூ.2000/ மற்றும் சான்றிதழும் வழங்கிச் சிறப்பிக்கப்பெறுவர்.

அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்த நாள் பேச்சுப் போட்டியில் பள்ளி மாணவர்களுக்கான தலைப்புகள் விவரம் முறையே, பின்வருமாறு 1. காந்தியின் மதநல்லிணக்கம், 2. காந்தியைப் போல் நான், 3. கப்பலோட்டிய தமிழரும் காந்தியும்.

அண்ணல் காந்தியடிகள் அவர்களின் பிறந்த நாள் பேச்சுப் போட்டியில் கல்லூரி மாணவர்களுக்கான தலைப்புகள் விவரம் முறையே, பின்வருமாறு 1.அண்ணல் காந்தியடிகளின் உண்ணாநிலைப் போராட்டங்கள், 2. தமிழர்கள் கண்ட காந்தி 3. காந்தியும் நேருவும்.

இவ்வாறு அச்செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கொள்கை முரசொலித்த செல்வமே!

# மைத்துனருக்குத் துணையாய் மனவலிமை தந்தவரே!



செல்வம் நீ !
ஆம்!
கலைஞரின் செல்வம்!
கழகத்தின் செல்வம்!
முரசொலியின் செல்வம்!
கழகத்தின் முரசொலிக்கும் செல்வம் நீ!

உன் தோள் சாய்ந்து
நின்ற தலைவனை
துணையற்று ஆக்கலாமா?

மனசாட்சியாய்
மாமனுக்கு ஒரு மாறன்;
மைத்துனருக்கு ஒரு செல்வம்!

குவளை தந்த குலக் கொழுந்தே
கொள்கை காக்க
கூண்டில் நீ நின்றபோது
குவலயம் உன்னை ஏறிட்டுப் பார்த்தது!
கழகத்தவர் கண்களோ வியர்த்தது!
கலைஞரின் கொள்கைக் கூட்டமோ
உன்னைக் கொண்டாடி மகிழ்ந்தது!

மாமன் எண்ணம் போல்
முரசொலியைக் காத்தவரே!
மைத்துனர்க்குத் துணையாய்
மனவலிமை தந்தவரே!

மாமனைப் பார்க்க
ஏன் இந்த அவசரம்!
மைத்துனர் தவிப்பார் என்ற
அக்கறைதான் ஏன் இல்லை!

தாய் மாமனைப் பார்க்க
தவம் இருந்து சென்ற செல்வம்
தாய் மாமன் மகனை மட்டும்
தவிக்கவிட்டுச் செல்லலாமா ?

மாமன் மகனுக்கு
மனசாட்சியாய் இருந்து கொண்டு
மாளாத் துயரத்தில்
தள்ளிச் செல்லலாமா?

எங்கள்
இளந்தலைவர் அழுகின்றார்!
இல்லம் எல்லாம் சோகமயம்!

யார் யாரைத் தேற்ற,
தேற்றுவதற்கும் ஆளில்லை!

என்ன சொல்லி
நாங்கள் அழ .. !
யாரிருக்கிறார் எங்களைத் தேற்றிவிட !

யார் அடித்தும் அழாத நம்மை
மார் அடித்து அழவைத்தார்!

இழந்து விட்ட செல்வத்தை
எங்கு இனி நாம் காண!
முத்துவேலரின் பேரனே
முற்றுப் பெற்று விட்டதோ
உம் எழுத்து!

இல்லை இல்லை
முடிந்து தான் போகுமோ
உன் வரலாறு.

உன் மாமாவிடம் சொல்;
உங்களைப் போலவே
உங்கள் மகனும் ஆள்கிறார் என்று
கொள்கை உறுதியில்
உங்கள் பேரனும் உள்ளார் என்று!
போய் வாருங்கள் முரசொலியாரே!



**இராசா அருண்மொழி**
தமிழ்நாடு சீர்மரபினர் நலவாரிய
துணைத் தலைவர் -
விருதுநகர் தெற்கு மாவட்ட
துணைச் செயலாளர்

### திருவண்ணாமலை வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர்

## உதயநிதி ஸ்டாலினுக்கு மாவட்ட எல்லையில் உற்சாக வரவேற்பு!

### பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு அறிக்கை!



திருவண்ணாமலை, அக். 18 -

திருவண்ணாமலைக்கு வருகை தரும் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதிஸ்டாலின் அவர்களுக்கு, திருவண்ணாமலை மாவட்ட எல்லையில் பிரமாண்டமான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது.

இது குறித்து பொதுப்பணித்துறை அமைச்சரும், கழக உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினருமான எ.வ.வேலு விடுத்துள்ள அறிக்கையில்...

இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராகப் பொறுப்பேற்ற பின்தான், தமிழ்நாட்டில் விளையாட்டுத்துறையே அகில இந்திய அளவில் மிகப்பெரிய அங்கீகாரம் பெற்றுள்ளது. விளையாட்டு வீரர்கள் மட்டும் அல்ல விளையாட்டுத்துறையே புத்துணர்ச்சி பெற்றுள்ளது.

தமிழ்நாடு துணை முதலமைச்சராகப் பொறுப்பேற்றவுடன் தமிழகம் முழுவதும், பம்பரமாக சுற்றி, சுழன்று மக்கள் பணியை செய்துவருபவரும், அனைவரையும் அச்சுறுத்தி வரும் வடகிழக்கு பருவமழையை, தன்னுடைய நிர்வாக திறமையாலும், ஆளுமையாலும் எந்தவித பாதிப்பும் இன்றி பொது மக்களை காத்து வருபவரும், கழகத்தின் இளைஞர் அணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள்,திருவண்ணாமலையில் விளையாட்டு வீரர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் தொகுப்பு மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்து துறை அரசு அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் மேற்கொள்ளவுள்ளார்.

இன்று (18.10.2024 - வெள்ளிக்கிழமை) மாலை 4.00 மணிக்கு திருவண்ணாமலை மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்பென்னாத்தூர் ஒன்றியம், சோமாசிபாடி, சோ.காட்டுக்குளம் அருகில் மிக பிரமாண்டமான, உற்சாகமான வரவேற்பு அளிக்கப்படவுள்ளது. நாளை (19.10.2024 - சனிக்கிழமை) காலையில் விளையாட்டு வீரர்களுக்கு கலைஞர் விளையாட்டு உபகரணங்கள் வழங்குதல் பின்னர், மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடன் ஆய்வுக்கூட்டம் நடைபெறவுள்ளது.

எனவே மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள், கிளைக்கழக நிர்வாகிகள் மற்றும் கழக முன்னோடிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு உற்சாக வரவேற்பு அளித்திட கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எ.வ.வேலு அறிக்கையில் கூறியுள்ளார்.

## சிந்தனைச் சிகரம் செல்வம் மறைந்தாரே...!



**அ**ன்பின் திருஉருவம்! அடக்கத்தின் மறுவடிவம்!
அறிவுப் பெட்டகம் ! எங்கள் செல்வம் அய்யா...
பண்பின் சிகரம் ! பணிவுக்கோர் இமயம்!
பிரிந்தார் என்பதை நம்பவே முடியவில்லை..!

செல்வமாய்க் கிடைத்திட்ட செல்வக் களஞ்சியம்!
சிந்தனைச் சிகரமா? நமைவிட்டு மறைந்தார்!
பல்வேறு ஆற்றலால் நமை வியக்க வைத்தவர்
பறந்துபோன திசைநோக்கி வணங்குகின்றேன்!

அதிர்ந்து பேசிட அறியாத மாமனிதர் எதையும்
அலசியே ஆராய்ந்து அடுத்தஅடி வைப்பார்!
உதிர்ந்து விட்டார் என்பதை உளம்ஏற்த மறுக்கிறது...
ஒவ்வொரு எழுத்துக்களும் நெஞ்செலாம் மணக்கிறது...

“சிலந்தி”யெனும் புனைப்பெயரில் சித்திரங்கள் தீட்டி
சிந்திக்க வைத்தவர்! சீரிய எழுத்தாளர் !
மலைபோல விமர்சனக் கணைகளைத் தொடுத்து
மாற்றாரை திணறடித்து மலைக்கவே வைத்தவர்!

நாகரீகம் பேணிநின்ற நல்லவரின் இழப்பு-தமிழ்
நாட்டுக்கே இழப்பு! நமதருமை முதல்வருக்கு
சோகத்தை தந்துவிட்ட சொல்லொணாப் பேரிழப்பு!
துணைமுதல்வரைப் பாதித்த தாங்கொணாப் பேரிழப்பு...!

முரசொலித்த எழுத்துக்கள் முடங்கியே விட்டது-நாளும்
முழங்கிய மூச்சோ அடங்கியே விட்டது
வரலாறாய் நம்மிடையே வலம் வந்த செல்வம் அய்யா
வாழ்ந்திருப்பார் எப்போதும் கலைஞரைப் போல !



-கவிஞர் இரவிபாரதி

### அரசின் அழுத்தமான முன்னெச்சரிக்கை நடவடிக்கையால்

## பெய்ய வேண்டிய கடும் மழையும் தடம் மாறிவிட்டது போலும்!

### முதல்வரின் நடவடிக்கைக்கு – பொன்குமார் பாராட்டு!



சென்னை, அக். 18 -

வடகிழக்குப் பருவமழையையொட்டி முதல்வர் எடுத்த நடவடிக்கையைப் பாராட்டி விவசாயிகள், தொழிலாளர்கள் கட்சித் தலைவர் பொன்குமார் விடுத்துள்ள பாராட்டு அறிக்கை வருமாறு:-

காற்றழுத்தத் தாழ்வு மண்டலத்தால் மூன்று நாட்களுக்கு கடும் மழை பெய்யும் என வானிலை ஆராய்ச்சி மையம் அறிவுறுத்தி, சென்னை உள்ளிட்ட மாவட்டங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் நேற்றைய முன் தினம் கடும் மழை பெய்தது. வெள்ளம் பெருக்கெடுத்தது. ஆனாலும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எடுத்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையின் அடிப்படையிலும் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், அதிகாரிகள் இரவு, பகலாக ஆய்வு செய்து, நிவாரணப் பணிகளை முடுக்கிவிட்டதன் அடிப்படையிலும் மழையால் எந்த பாதிப்பும் இல்லாமல் மக்கள் பாதுகாக்கப்பட்டு ள்ளனர்.

**வரலாற்றுச் சாதனையாகும்!**

சுரங்கப் பாதைகளில் தேங்கிய நீர் கூட 24மணி நேரத்தில் அகற்றப்பட்டு போக்குவரத்திற்கு வழி செய்யப்பட்டுள்ளது. கடந்த முறை எங்கெல்லாம் மழை வெள்ளத்தால் மக்கள் பாதித்தார்களோ, அந்தப் பகுதிகளை குறி வைத்து அரசு செயல்பட்டதனுடைய விளைவாக அப்பகுதியிலும் மக்கள் பாதிக்கப்படாமல் காக்கப்பட்டுள்ளனர். ஒரு நாள் முழுவதும் பெய்த கடும்மழையால் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளிலிருந்து 95 விழுக்காடு 24 மணி நேரத்தில் சரி செய்யப்பட்டிருப்பது ஒரு வரலாற்று சாதனையாகும். எல்லாவற்றி லும் முன்மாதிரியாக இருந்து சாதனைப் படைத்து வரும் திராவிட மாடல் ஆட்சி, இதிலும் சாதனைப் படைத்திருக்கிறது.

மூன்று மாத காலத்திற்கு முன்பே திட்டமிடல் தொடங்கி இருக்கிறது. ஒவ்வொன்றாக பார்த்து பார்த்து பணிகளை வகுத்திருக்கிறார்கள். குறிப்பாக கடந்த முறை கடும் மழையால் வேளச்சேரி, பள்ளிக்கரணை பகுதிகளில் படகுகளில் கூட செல்ல முடி யாத நிலை ஏற்பட்டது. அப்படி ஒரு நிலை ஏற்படுமேயானால் அங்குள்ள மக்களுக்கு உணவளித்திட ட்ரோன்கள் மூலம் உணவளிப்பதற்கான ஏற்பாடுகளும் ஒத்திகைகளும் மேற்கொள்ளப்பட்டு தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது என்பது முன்னெச்ச ரிக்கையின் உச்சகட்டமாகும்.

**முதல்வருக்கு மக்கள் பாராட்டு!**

இப்படி தமிழ்நாடு அரசும், அலுவலர்களும் நிவாரணப் பணிகளில் அங்குலம் அங்குலமாக பார்த்து பணியாற்றியதின் விளைவாக தான் நேற்றும், இன்றும் பெய்ய வேண்டிய கடும் மழை கூட தடம் மாறிப் போய்விட்டது போலும். முதலமைச்சரின் முன்னெச்சரிக்கை நடவடிக்கை மற்றும் அமைச்சர் அதிகாரிகளின் கடும் உழைப்பால் மழையின் பாதிப்பின்றி மக்கள் பாதுகாக்கப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு அரசின் இந்த துரித நடவடிக்கைக்கு மக்களோடு சேர்ந்து விவசாயிகள்தொழிலாளர்கள் கட்சியும் முதலமைச்சரைப் பாராட்டுகிறது.

இவ்வாறு பொன்குமார் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



தேனி மாவட்டம் கம்பம் நகராட்சியில் மாதாந்திர நகர் மன்றக் கூட்டம் நகர் மன்றத் தலைவர் வனிதா நெப்போலியன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் நகர் மன்ற உறுப்பினர்கள் முன்னிலையில் 12 தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டன. கூட்டத்தில் நகராட்சி ஆணையர் பார்கவி, நகராட்சி பொறியாளர் ஐயனார் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள், நகராட்சி அதிகாரிகள் கலந்து கொண்டனர்.